## பாடம்-10

## தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து

திருமறையின் மையமே தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து தான். பழைய ஏற்பாட்டுச் செய்தி “இயேசு வருகிறார்” என்பது. புதிய ஏற்பாட்டுச் செய்தி “இயேசு வந்துவிட்டார்” என்பது இவருடைய வருகைதான் மனித வரலாற்றிலேயே மிகவும் முக்கியமான சம்பவம்.

## அவருடைய பிறப்பு

இயேசு பெத்லகேமில் பிறந்தார். அவரை மேய்ப்பர்களும் சாஸ்திரிகளும் சந்தித்தது, ஏரோது ராஜாவிடமிருந்து தப்பி எகிப்திற்குச் சென்றது ஆகியவைகளை மத்தேயு 2-ம் அதிகாரத்திலும், லுக்கா 1,2 அதிகாரங்களிலும் படிக்கலாம்.

அவரது திருமுழுக்கு (ஞானஸ்நானம்) திருமுழுக்கு பண்ணப்பட்டார். யோவான் மனந்திரும்புதலுக்கென்று ஜனங்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான் (மாற்கு 1:4) ஆனால் இயேசு பாவமற்றவரானதால் யோவான் அவருக்கு ஞானஸ்நானங்கொடுக்க மறுத்தார். எல்லா நீதியையும் நிறைவேற்றும்படியாக தனக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படியாக இயேசு கேட்டுக்கொண்டார். பிறகு யோவான் அவருக்கு (ஞானஸ்நானம்) திருமுழுக்கு கொடுத்தார். (மத 3:15)

## அவருடைய அற்புதங்கள்

இயேசு அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் ஏன் இப்படி செய்தார் என்று அநேகருக்குத் தெரிவில்லை. தான் தேவனுடைய குமாரன் என்று நிரூபிப்பதற்காக இயேசு அநேக அற்புதங்களை செய்தார். (அப் 2:22; யோவான் 20:30,31) அநேகர் இயேசுவிற்கு இருந்த இதே வல்லமை தங்களுக்கும் இருப்பதாக கூறுகின்றனர். ஆகவே கீழ்காணும் சில வித்தியாசங்களைப் பாருங்கள்.

| இயேசுவும் ஆதி சபையினரும் | இன்றைய மனிதர்கள் |
|---|---|
| 1. ஜனங்கள் உடனே குணமானார்கள் | குணமாக பலநாட்கள் ஆகின்றன |
| 2. எல்லாரும் குணமானார்கள் | சிலர் மட்டுமே குணமாகின்றார்கள் |
| 3. சுகமாவதை எல்லோரும் காண முடிந்தது | குணம் பெற்றதாக சொல்பவர்கள் உண்மையில் வியாதியஸ்தர்களாயிருந்தார்களாவென தெளிவாக தெரியவில்லை |
| 4. பிணியாளிகளிடம் விசுவாசத்தை எப்பொழும் எதிர்ப்பார்க்கிவில்லை | எப்போதும் பிணியாளிகளிடம் விசுவாசத்தை எதிர்பார்க்கின்றனர். |
| 5. முழுமையான குணம் அடைந்தனர் | பகுதி குணம் மட்டுமே கிடைக்கிறது |

உண்மையில் இயேசுவைப் போல் இன்று யாருக்குமே வல்லமை கிடையாது. அவர் செய்தவைகளையும் இன்று யாரும் செய்ய முடியாது.

## அவருடைய உவமைகள்

இயேசு உவமைகளையும் போதித்தார். ஆவிக்குரிய கருத்தை பூமிக்குரிய உதாரணங்களைக்கொண்டு விளக்குவதே உவமையாகும்.இயேசு போதித்த சில உவமைகளை மத்தேயு 13-ம் அதிகாரத்திலும், லுக்கா 15-ம் அதிகாரத்திலும் நாம் படிக்கலாம்.

## அவருடைய அப்போஸ்தலர்கள்

இயேசுவின் மற்றொரு முக்கியமான வேலை, தனது அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்ததுதான். இயேசுதான் இந்த உலகை விட்டு விரைவில் பரலோகம் செல்ல வேண்டும் என்று அறிந்திருந்தபடியால் தனது ஊழியத்தைத் தொடர்ந்து செய்யும்படி ஒரு சில நபர்களைத் தேர்ந்தெடுத்தார். இயேசுவின் திட்டப்படி இவர்கள் ஊழியம் செய்வதற்காக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றனர்.

## அவருடைய சபை

இயேசு மத் 16:15-18ல் தனது சபையயைக் கட்டப்போவதாக அறிவித்தார். ‘‘வேதாகமத்தில் சபை என்பதற்கு கட்டடம் என்று பொருளல்ல, அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்று பொருள். ஒரு முறை ஸ்தாபிக்கப்பட்டு என்றென்றும் நிலைத்துநிற்கக்கூடியது, இந்த சபை (மத் 16:18; தானி 2:44). இன்று இயேசு கட்டிய சபையில் அங்கமாக இருக்க வேண்டியதுதான் முக்கியமே தவிர, தாங்கள் நினைக்கிற சபையில் அங்கமாயிருப்பதல்ல. இயேசு சபைக்காக மரித்தார். (அப் 20:28) இந்த சபையில் தான் இரட்சிப்பு இருக்கிறது (எப 5; 23; எபே 1:2) பின்வரும் பாடங்களில் அதிகமாக இதை தெரிந்து கொள்வோம். இன்று காணப்படும் எந்த மனித சபைகளையும் கிறிஸ்து ஸ்தாபிக்கவில்லை. அவைகளைப்பற்றி வேதாமத்தில் குறிப்புகள் இல்லை. இவைகளை நம்பியிருப்போர் கைவிடப்படுவர்.